பிற்பகல் 12-30

(இ) தமிழ்நாடு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு, 2005

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.*

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன் : *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2005 ஆம் ஆண்டு ஆண்டு தமிழ்நாடு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

5. அறிவிப்புகள்

(அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*